Koviloor Digital Library

ஸ்ரீ [illegible]

ஸ்ரீ ரகுநந்தன பரப்ரஹ்மணே நம:

ஆதித்ய ஹ்ருதயம்.

வித்வான்—திருநீர்மலை,
மாடபூசி, ஸ்ரீநிவாஸராகவாசாரியர் எழுதிய
பதவுரை, தாத்பர்யம்.

பிரசுரகர்த்தர்.

டி. எம். ரகுநாதன் & பிரதர்ஸ்,
திருநீர்மலை
குரோம்பேட் P. O.

Acc. No.
6912

காபிரைட் 1929 விலை அணா. 2.

Koviloor Digital Library

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ ராமநாம வைபவம்.

நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை
சூடிய சிலையிராமன்தோள் வலிகூறுவோர்க்கே.

நன்மையுஞ் செல்வமு நாளுநல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமுமின்றித் தீருமே
இம்மையே ராமவென்றி ரண்டெழுத்தினால்.

இறுவரம்பி னிராமவென்றோரும்பர்
நிறுவரென்பது நிச்சயமாதலால்
மறுவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்
பெறுவரென்பது பேசவும் வேண்டுமோ.

Koviloor Digital Library

ஸ்ரீ ரஸ்து.

ஸ்ரீஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத்ஸமேத
ஸ்ரீரகுநந்தன பரப்ரம்ஹணே நம:.

ஆதித்ய ஹ்ருதயம்.

---

1. ததோ யுத்தபரிஸ்ராந்தம் ஸமரே சிந்தயா ஸ்திதம்
ராவணம் சாக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய ஸமுபஸ்திதம்.

2. தைவதைஸ்ச ஸமாகம்ய த்ரஷ்டு மப்யாகதோ ரணம்
உபகம்யாப்ரவீத் ராம அகஸ்த்யோ பகவான் ரிஷி:.

(பதவுரை) தத:—பிறகு, ரணம்—யுத்தத்தை, த்ரஷ்டும்—பார்ப்பதற்கு, தைவதைஸ்ச—தேவர்களுடன், ஸமா

Koviloor Digital Library

கம்ய—சேர்ந்து, அப்யாகத:—வந்த, பகவான்—பூஜ்யரான, ரிஷி:—தியானபரரான, அகஸ்த்ய:—அகஸ்த்யர், யுத்த பரிஸ்ராந்தம்—போரில் இளேப்புற்று, அக்ரத:—எதிரில், யுத்தாய—போருக்காக, ஸமுபஸ்திதம் — வந்த, ராவணஞ்ச—ராவணனையும், த்ருஷ்ட்வா—பார்த்து, ஸமரே-போரில், சிந்தயாஸ்திதம்—ஆலோசனையுடனிருக்கும், ராமம்—ஸ்ரீராகவனை, உபகம்ய—கிட்டி, அப்ரவீத்—சொன்னார்.

(தாத்பரியம்.) இந்தவிதம் ஸ்ரீராகவனும், இராவணனும், ஒபாப்போர் புரிகையில், இராவணன் சிறிது இளைப்படைகையில் அவனுடைய ஸாரதி, யுத்தரங்கத்தினின்றும், தேரை அப்புறம் செலுத்தி, இராவணனுக்கு சைத்யோபசாரம் செய்திருக்கும் தருணத்தில், ஸ்ரீராகவன்,

Koviloor Digital Library

அயன் பக்கல் வெகு அருமையுற்றவரம் பெற்ற இவனை நம் உண்மையான ஸ்வரூபமின்றி வெல்லுவடுதப்படி என்று யோசித்திருக்கும் தருணத்தில், உடனே இராவணன் போர் பூமியில் வந்து தோன்ற, அத்தருணத்தில், ராம ராவணயுத்தத்தின் அதிசயத்தைக்காண, வானிடையில் தேவர்களோடு கூடவந்த வெகு மகிமையுற்ற அகஸ்தியமாமுனிவர் இவர்களைக் கண்ணுற்று, ஸ்ரீராகவனையணுகி சொல்லலாயினர்.

(அவதாரிகை) இவ்வாதித்ய ஹ்ருதயத்துக் குண்டான கீர்த்திப் பெருமையை, அயன் பக்கல்ருசி யுண்டாகு நிமித்தம், மூன்று சுலோகங்களால் கொண்டாடுகிறார்.

3. ராம ராம மஹாபாஹோ ஶ்ருணு குஹ்யம் ஸநாதனம்
ஏன ஸர்வாந் அரீன் வத்ஸ ஸமரே விஜயிஷ்யஸி.

Koviloor Digital Library

4. ஆதித்ய ஹ்ருதயம் புண்யம் ஸர்வ ஶத்ரு விநாஶனம்
ஜயாவஹம் ஜபேந் நித்யம் அக்ஷய்யம் பரமம் சிவம்.

5. ஸர்வமங்கள மங்கள்யம் ஸர்வ பாப ப்ரணாஶனம்
சிந்தாஶோக ப்ரஶமனம் ஆயுர்வர்த்தன முத்தமம்.

(பதவுரை) ராம—ஓ! ராம, ராம—ஹே! ராம, மஹா பாஹோ—பெரியபுஜ முடையவனே, வத்ஸ—ஓ!குழந்தாய், யேன—எதனால், ஸமரே—அமரில், அரீன்—பகைவர், ஸர்வான்—எல்லோரையும், விஜயிஷ்யஸி—வெல்வையோ, (அப்படிப்பட்ட), குஹ்யம்—ரஹஸ்யத்தை, ஶ்ருணு—கேள், ஸநாதனம்—அனுதியும், புண்யம்—பரிசுத்தமும், ஸர்வஸத்ருவிநாஶனம்—எல்லாப்பகைவரையும் அழிப் ஜயாவஹம்—ஜயமளிப்பதும், நித்யம்—எப்போது

Koviloor Digital Library

மிருப்பதும், அக்ஷய்யம்—அழிவற்றதும், பரமம்—உயர்ந் ததும், சிவம்—மங்களமானதும், ஸர்வமங்கள மங்கள்யம்—எல்லாமங்களங்களுக்கும் மங்களமானதும், ஸர்வபாப ப்ர ணாசனம்—எல்லாபாதகத்தை அழிப்பதும், சிந்தாசோகப் ரசமனம்—மனதின்துயரத்தை யொழிப்பதும், ஆயுர்வர்த் தனம்— ஆயுளைப்பெருக்குவதும், உத்தமம் — சிறந்தது மான, ஆதித்யஹ்ருதயம்—சூரியன் உள்ளத்தை (உகப்பிக் கவல்ல) ஆதித்யஹ்ருதயமென்கிற ஸ்தோத்திரத்தை, ஜபேத்—ஜபிக்கவேண்டும்.

(தா-ம்.) ஸர்வஜன மனோஹ்ரமான வடிவழகுற்று, எப்படிப்பட்டவரையும் உகப்பிக்கவல்ல ஓ! ராம உன் பெரு மையை நீ ஏன் அறியவில்லை. ஏன் தயங்கி மயங்குகின்றாய்.

Koviloor Digital Library

நீ எதனால் உன் பகைவ ரனைவரையும் வென்று விஜயமடை வையோ அதற்குத்தக்கதோர் மந்திரமுளது. அதையுபதே சிக்கிறேன் கேள். அது ஆதித்யனது மனதைக்களிக்கச் செய்வது. அதாவது ஆதித்ய மண்டலவர்த்தியான பரம புருஷனுடைய ஸ்தோத்திரமானது. அதனைஜபிப்பவர் கட்கு எல்லா நன்மைகளையும் விளைவிக்குமது. பகைவரனை வரையும் அழியச்செய்து வெற்றியைக் கைமேலளிக்கவல் லது. அஃது அழிவில்லாப் பெரும் பயனைத்தருமது. வெகு தூய்மையானது. மங்களங்களெல்லாவற்றுக்கும் மங்களத் தைப் பெருக்குமது. பாதகமனைவற்றையும் ஒழிக்கவல்லது. மனதின் துயரத்தை யடியெடுக்க வல்லது. வாழ்நாளைப் பெருகச் செய்யுமது. ஆதலால் அல்லாத மந்திரங்கள் போலன்றி இது மிகச் சிறந்தது.

Koviloor Digital Library

(அவதாரிகை) ஸ்துதிசெய்தற்குரிய தேவதையை ஸ்துதிக்கிறார்

6. ரஶ்மிமந்தம் ஸமுத்யந்தம் தேவாஸுர நமஸ்க்ருதம்
பூஜயஸ்வவிவஸ்வந்தம் பாஸ்கரம் புவனேஶ்வரம்.

(பதவுரை) ரஸ்மிமந்தம்—கிரணங்களுடையவனும். ஸமுத்யந்தம்—நன்குஉதயமாகிறவனும், தேவாஸுரநமஸ்கிருதம்—தேவர், அசுரர், இவர்களால், நமஸ்கரிக்கப்பட்டவனும், விவஸ்வந்தம்—தன்னொளியால் மற்றவையைமறைப்பவனும், பாஸ்கரம்—ஒளிவிடுமவனும், புவனேஶ்வரம்—உலகநாதனுமான, (சூரியனை) பூஜயஸ்வ—(புகழால்) பூஜி

(தா-ம்.) பொன்வர்ணமான கிரணங்களுடனே குறைவின்றி பிரதிதினம் பூரணமாக உதித்து எல்லா ஜனங்களை

Koviloor Digital Library

யும், அவரவரின் கர்மங்களைச் செய்விப்பவனும் அநுகூல பிரதிகூல விபாகமற தேவர் அசுரர்களால் நமஸ்கரிக்கப் பட்டவனும், தனது சோதியினல் மற்ற எல்லா ஒளியை யும் மழுங்கச்செய்பவனும் அன்றிக்கே, தனது உதயத்தால் வியவஹாரங்களெல்லாவற்றையும் செய்யச் செய்து அத னல் பொருள் திரட்டச்செய்யுமவனுதலால் தனத்திற்கிருப் பிடமானவனும், சந்திரன், நக்ஷத்திரம், முதலியவைகட்கு ஒளியையளிப்பவனும், அன்றி பொருளெல்லா வற்றையும் அவைகளின் ஸ்வரூபத்தை நன்கறியத்தக்க அறிவை விளக் கவல்லவனும், உஷ்ணத்தையும், மழையுமளித்து உலகங்க ளெல்லா வற்றையும் பரிபாலிப்பவனுமான ஆதித்யனை ஆதித்யஹ்ருதயம் என்கிறஸ்தோத்திரத்தினல் நீ பூஜிக்க வேண்டும்.

Koviloor Digital Library

(அவதாரிகை) அல்லாததேவர் கிடக்க இவன்மாத்திரம் பூஜார்ஹன், எங்ஙனமென்பதைச் சொல்லுகிறார்.

7. ஸர்வதேவாத்மகோ ஹ்யேஷ தேஜஸ்வீ ரஶ்மிபாவந:
ஏஷ தேவாஸுரகணாந் லோகாந் பாதி கபஸ்திபி:.

(பதவுரை) ஏஷ:—இந்த (சூரியன்) ஸர்வதேவாத்மக:—எல்லாதேவர்களுடைய சரீரமுடையவன், தேஜஸ்வீ—வெகுசோதியுடையவன், ரஸ்மிபாவன:—கிரணங்களால் புகழடைந்தவன், ஏஷ:—இவன், தேவாஸுரகணான்—தேவர், அசுரர், இவர்களின் கூட்டத்தையும் லோகான்—உலகங்களையும், கபஸ்திபி:—கிரணங்களால், பாதி—காப்பாற்றுகிறான்.

தா-ம். ஓ! ராமா! இவ்வாதித்யன் ஸர்வதேவதாஸ்வரூபி. வெகு ஒளியுடையவன். தன் கிரணங்களைப்பற்றி

Koviloor Digital Library

வெகு புகழ்ச்சிபெற்றவன். தன் கிரணங்களாலேயே எல்லா உலகங்களை காப்பாற்றுகிறான்.

(அவதாரிகை) சகலருக்கும் இவனே அந்தராத்மா என்பதை யருளிச்செய்கிறார்.

8. ஏஷப்ரம்ஹாச விஷ்ணுஶ்ச சிவஸ்கந்த: ப்ரஜாபதி:
மஹேந்த்ரோ தனத:காலோ யமஸ்ஸோமோ ஹ்யபாம்பதி:.

ஏஷ:—இவன், பிரம்ஹாச—பிரமனும்,விஷ்ணுஶ்ச—விஷ்ணுவும், ஶிவ—சிவனும், ஸ்கந்த:—குமாரஸ்வாமியும், ப்ரஜாபதி:—நவப்ரஜாபதிகளும், மஹேந்திர:—தேவேந்திரனும், தனத:—குபேரனும், கால:—மிருத்யுவும், யம:—எமனும், ஸோம:—சந்திரனும், அபாம் பதி:—வருணனும் (ஆகிறான்).

Koviloor Digital Library

9. பிதரோ வஸவஸ்ஸாத்யா அஸ்விநௌ மருதோமனு:
வாயுர்வன்ஹி: ப்ரஜாப்ராணு ருதுகர்த்தா ப்ரபாகர:.

பிதர:—பித்ருதேவதையும், வஸவ:—அஷ்ட வசுக்களும், ஸாத்யா—ஸாத்யர்களும், அஸ்விநௌ—அஸ்வினி தேவர்களும், மருத:—நாற்பத்தொன்பது மருத்கணங்களும், மனு:—மனுவும், வாயு:—வாயுவும், வன்ஹி:—நெருப்பும் ப்ரஜாப்ராண:—பிராணிகளின் உயிரும், ருதுகர்த்தா—ருதுக்களையுண்டு செய்யும் பிரபாகர:—சூரியனுமாக (ஆகிறான்.)

(தா-ம்) இவரே பிரம்ஹாவும், விஷ்ணுவும், சிவனும் ஸ்கந்தனும், பிரஜாபதிகளும், மகேந்திரனும், குபேரனும், மிருத்யு தேவதையும் ஜலபதியான வருணனும் ஸோமனும்

Koviloor Digital Library

சாத்யர்களும், அஸ்வினீதேவர்களும், அஷ்டவசுக்களும் ஆவஹம் முதலிய மனுவும் வாயுக்களும் பிரஜைகளின் பிராணன்களும் ருதுக்களை யுண்டாக்கும் பிரபாகரனும் ஆகியுள்ளவர். இவரே பிரம்மாதிகளான சமஸ்த தேவதைகளையும் சரீரமாகவுடைய பரமாத்மாவாயுமுள்ளவர்.

(அவதாரிகை) இவ்விதம் ஆதித்ய மண்டல அந்த-வர்த்தியான பரமபுருஷன் ஸ்வரூபத்தைச் சொல்லி, ஆதித்யஹ்ருதயோபதேசம் செய்கிறார்.

10. ஆதித்ய ஸ்ஸவிதா ஸூர்ய: கக: பூஷா கபஸ்திமான்
ஸுவர்ண ஸத்ருஶோ பானு: ஹிரண்யரேதா திவாகர:.

(பதவுரை) ஆதித்ய:—(நீ) அதிதிக்கு மகனாகப் பிறந்தவன், (அல்லது) உலகங்களனைவற்றுக்கும் தலைவன், ஸவிதா

Kovilpoor Digital Library

(நீ) சகல உலகங்க[illegible]யவன் சூர்ய:—(நீ) ஜனங்களை அவரவர்களின் கர்மங்களைச்செய்விப்பிக்கிறவன், கக:—(நீ) லோகோபகாரமாக ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவன், பூஷா—(நீ) மழைபொழிவித்து உலகங்களைப் போஷிப்பவன், கபஸ்திமான்—(நீ) சிறந்த கிரணங்களுடையவன், ஸுவர்ண ஸ்த்ருஸ:—(நீ) பொன்னுக்கு நிகரானவன், பானு:—(நீ) எங்கும் விளங்குபவன், ஹிரண்ய ரேதா:—ஸ்வர்ணமயமானப்ரம்ஹாண்டத்தை யுண்டாக்குகிறவன், திவாகர:—பகலையுண்டாக்குகிறவன். (அல்லது) ஜனங்களைச்செய்கைகளில் செய்விப்பிக்கிறவன்.

11 ஹரிதஶ்வ: ஸஹஸ்ரார்ச்சி ஸப்த ஸப்திர் மரீசிமான்
திமிரோந்மதன ஶம்பு ஸ்த்வஷ்டா மார்த்தாண்ட

[அம்ஶுமான்.

Koviloor Digital Library

(பதவுரை) ஹரிதஸ்வ:—(நீ) பச்சைநிறமுள்ள குதிரைகளுடையவன், ஸஹஸ்ரார்சி:—(நீ) ஆயிரம் கிரணங்களை யுடையவன், ஸப்தஸப்தி:—ஸப்தயெனும் குதிரையுடையவன், மரீசிமான்—(நீ) வெகுபிரகாசமுள்ள கிரணங்களுடையவன், திமிரோன்மதன:—(நீ) இருளைப்போக்குகின்றவன், ஶம்பு:—(நீ) எல்லோருக்கும் சுகமளிப்பவன். த்வஷ்டா—(நீ) எல்லாவற்றையு மழிப்பவன், மார்த்தாண்ட:—(நீ) உலகங்களெல்லாம் அழிந்தபின், அழிந்த அவ்வுலகில் நின்றும் பின்னும் தோன்றுபவன், (அல்லது) அழிந்த உலகங்களைப் பிழைப்பிக்கின்றவன், அம்சுமான்—(நீ) எங்கும் விளங்கும் சோதியுடையவன்.

12. ஹிரண்யகர்ப்ப: ஶிஶிர: தபனோ பாஸ்கரோ ரவி:
அக்னிகர்போ திதே:புத்ரஶ்ஶங்கஶ்ஶிஶிரநாஶன:

Koviloor Digital Library

(பதவுரை) ஹிரண்யகர்ப்ப:—(நீ) பொன்மயமான பிருஹ்மாண்டத்தில் விளங்குபவன், (அல்லது) இனிதும் இனிப்புமான உள்ளத்தை யுடையவன், ஶிஶிர: —தாபங்களெல்லாவற்றையும் தீர்ப்பவன், குளிர்ந்தவன், தபன:—(நீ) தபிக்கச்செய்பவன், பாஸ்கர:—(நீ) ஒளியை உண்டு செய்பவன், ரவி: —(நீ) அனைவராலும் துதிக்கப் படுமவன், அக்னிகர்ப்ப:—(நீ) அக்னியை கர்ப்பத்திலுடையவன், அதிதே:புத்ர:—(நீ) அதிதிக்குமகன், ஶங்க:—(நீ) ஆனந்த ஸ்வரூபி, ஶிஶிரநாஸன:—பனியைப்போக்கடிப்பவன்.

(தா-ம்) நீர் அதிதிக்குமகனுகப் பிறந்தவர். அல்லது உலகங்களனைவற்றுக்கும் தலைவர். ஜனங்களுடைய கர்மங்களைச் செய்விப்பிக்கிறவர். லோகோபகாரமாக ஆகாயத்தில்

Koviloor Digital Library

சஞ்சரிப்பவர். நீர் மழை பொழிவித்து உலகங்களைப் போஷிப்பவர். சிறந்த கிரணங்களையுடையவர். ஸ்வர்ண மான நிறமுடையவர். 'நன்றாய் பிரகாசிப்பவர்'. ஸ்வர்ணமய மான பிரும்ஹாண்டத்தை உண்டாக்குகிறவர். பகலை யுண் டாக்குகிறவர். அதாவது பகலை யுண்டாக்கி ஜனங்களுக்குச் செய்கையைக் கொடுப்பவர். (நீர்) பச்சை நிறமுள்ள குதிரை களை யுடையவர். ஆயிரம் கிரணங்களை யுடையவர். ஸப்த என்னும் குதிரை யுடையவர். வெகு பிரகாசமுள்ளவர். இருளைப் போக்குகிறவர். எல்லோருக்கும் சுகமளிப்பவர். உலகங்களெல்லாம் அழிந்தபின் அவ்வுலகனின்றும் பின் னும் தோன்றுபவர். எங்கும் விளங்கும் சோதியுடையவர். பொன் மயமான பிருஹ்மாண்டத்தில் விளங்குபவர், அல் லது இனிதும் இனிப்புமான உள்ளத்தையுடையவர்.

தாபங்களெல்லாவற்றையும் தீர்த்து குளிர்க்திருப்பவர். Koviloor Digital Library
உலகத்துக்குக் கண்ணுகிய ஒளிகளை உண்டாக்குகிறவர். அனைவராலும் துதிக்கப்படுமவர். நீர் ஆநந்த ஸ்வரூபி.

13. வ்யோமமனுத ஸ்தமோ பேதீ ருக்யஜு:ஸ்ஸாமபாரக:
கனவ்ருஷ்டி ரபாம் மித்ரோ விந்த்ய வீதீ ப்லவங்கம:.

(பதவுரை)வ்யோமமனுத:—(நீ)வானிடைக்கரசன் தமோபேதீ—இருளையகற்றுமவன் ருக்யஜு:ஸ்ஸாம பாரக:—ருக் யஜுர்ஸாமம் இம்மூன்று வேதங்களின் கரையடைந்தவன், கனவ்ருஷ்டி:—பெருமழைபெய்பவன், அபாம்மித்ர:—தண்ணீருக்கு நண்பன், விந்தய வீதிப்லவங்கம:—விந்தியமலையின் வழி செல்பவன்.

தா-ம். நீர் வானிடைக்கரசன். இருளையகற்றுமவர். அல்லது தம்மையடைந்தவர்களின் தமோகுணத்தை நீக்கு

Koviloor Digital Library

பவர் ருக்ய ஜுஸ்ஸாம் வேதங்களின் கரையையடைந்தவர். பெரு மழை பெய்பவர். அதனால் ஜனங்களுக்கு நண்பர். விந்திய மலையின் வழியாக சஞ்சரிப்பவர்.

14 ஆதபீ மண்டலீ ம்ருத்யுஃ பிங்களஸ்ஸர்வதாபன:
கவிர்விஶ்வோ மஹாதேஜா ரக்த: ஸ்ஸர்வ பவோத்பவ:.

(பதவுரை) ஆதபீ—(நீ)வெய்யிலுடையவன், மண்டலீ—வளைந்த உருவுடையவன், ம்ருத்யு:—பகைவரைக் கொல்பவன், பிங்கள:—பசுமையுடையவன் ஸர்வதாபன:—அனைத்தையும் உலரச்செய்பவன், கவி:—பண்டிதன், விஶ்வ:—அனைவற்றையும் சரீரமாயுடையவன், மஹாதேஜா:—வெகு தேஜஸ்ஸுடையவன் ரக்த:—அடுத்தவர்மீது அன்புள்ளவன், ஸர்வபவோத்பவ:—காரிய மனைத்துக் குரியவன்.

தா-ம். (நீர்) வெயிலையுடையவர். வளைந்த மண்டலத்தையுடையவர். பகைவரைக் கொல்பவர். உதய காலத்

Koviloor Digital Library

இல் பிங்களவர்ணமுடையவர். சகலரிடத்திலும் நீங்காத அன்பு பூண்டவர். பண்டிதர் (அதாவது) சகல சாஸ்திரங்களுக்கும் பிரவர்த்தகர். மஹா தேஜஸ்ஸையுடையவர்.

15. நக்ஷத்ரக்ரஹதாராணும் அதிபோ விஶ்வபாவன:
தேஜஸாமபி தேஜஸ்வீ த்வாதஶாத்மன் நமோஸ்துதே.

(பதவுரை) நக்ஷத்ர—கிரஹ•தாராணும்—(நீ) நக்ஷத்திரம், கிரஹம் ஸாதாரண நக்ஷத்திரமிவைகட்கு, அதிப:—இறைவன், விஶ்வபாவன:—உலகத்தை நிலை நிறுத்துமவன், தேஜஸாமபி—ஒளிகளுள் தேஜஸ்வீ— ஒளியுள்ளவன், த்வாதஶாத்மன்—பன்னிரெண்டுருவுடையோனே! (அப்படிப்பட்ட)தே—உனக்கு நம:—அஸ்து—வணக்கம், உண்டாகுக.

16. நம: பூர்வாய கிரயே பஶ்சிமே கிரயே நம:
ஜ்யோதிர்கணாநாம் பதயே தினாதி பதயே நம:.

Koviloor Digital Library

(பதவுரை) பூர்வாய—கீழ்திசையிலுள்ள, கிரயே—மலையிலிருப்பவனும், பஶ்சிமே—மேற்றிசையிலுள்ள, கிரயே—மலையிலிருக்கும் உன்பொருட்டும்) நம: — நமஸ்காரம், ஜ்யோதிர்கணானாம் — ஒளியுள்ளவையின் கூட்டத்திற்கு, பதயே—இறைவனாகிய (உன்பொருட்டு நமஸ்காரம்), தினாதிபதயே—பகலுக்கிறைவனாகிய (உன்பொருட்டு) நம: — நமஸ்காரம்.

17. ஜயாய ஜயபத்ராய ஹர்யஶ்வாய நமோ நம:.
நமோ நம ஸஹஸ்ராம்ஶோ ஆதித்யாய நமோ நம:.

(பதவுரை) ஜயாய—வெல்லும்தன்மையனான (உன்பொருட்டு) நம:—நமஸ்காரம். ஜயபத்ராய—வெற்றி, மங்களமிவைகளையளிக்க வல்ல (உன்பொருட்டு) நம:—நமஸ்காரம். ஹர்யஶ்வாய—பச்சைக் குதிரையுடைய (உன்பொருட்டு) நம:—நமஸ்காரம், ஸஹஸ்ராம்ஶோ—ஆயிரம்கிரணங்களுடையோனே! நம:—(உன்பொருட்டு) நமஸ்

Koviloor Digital Library

காரம். ஆதித்யாய—சூரியனுக்கு (உன்பொருட்டு) நம:-நம:—நமஸ்காரம். நமஸ்காரம்.

தா-ம். நக்ஷத்திரம், கிருஹம், சாதாரண நக்ஷத்திரம் இவைகளுக்கு அதிபதியாயுள்ளவரும், உலகத்தை நிலைநிறுத்துகிறவரும், ஒளிகளுக்குள் சிறந்தஒளியுடையவரும், பன்னிரண்டு மூர்த்திகளையுடையவருமான உமக்கு நமஸ்காரம். கீழ்த்திசையிலுள்ள உதயபர்வதத்திலிருக்கும் உமக்கு நமஸ்காரம். மேற்றிசையிலுள்ள அஸ்தமன பர்வதத்திலிருக்கும் உமக்கு நமஸ்காரம். ஒளிகளின் கூட்டங்களுக்கு அதிபதியான (உமக்கு நமஸ்காரம்.) ஜயம் பெறுபவரான உமக்கு நமஸ்காரம். வெற்றி, மங்களம் இவைகளை கொடுக்கவல்ல உமக்கு நமஸ்காரம். ஆயிரம் கிரணங்களுடையோனே! உமக்கு நமஸ்காரம். சூரியனாகிய உமக்கு நமஸ்காரம். நமஸ்காரம்.

Koviloor Digital Library

18. நம உக்ராய வீராய ஸாரங்காய நமோ நம:.
நம: பத்மப்ரபோதாய மார்த்தாண்டாய நமோ நம:.

(பதவுரை) உக்ராய—பயங்கரனாகிய (உன்பொருட்டு) நம:—நமஸ்காரம், வீராய—பிராணிகளைப்பல விதமேவுகிற (உன்பொருட்டு) நம:—நமஸ்காரம், ஸாரங்காய—விரைவாகச் செல்லும் (உன்பொருட்டு) நம:-நம:—நமஸ்காரம் நமஸ்காரம், பத்மப்ரபோதாய—தாமரையை யலர்த்தக்கடவ (உன் பொருட்டு) நம:—நமஸ்காரம், மார்த்தாண்டாய—அழிந்த உலகத்தை யுண்டு பண்ணவிருக்கும் (உன்பொருட்டு) நம:—நம:—நமஸ்காரம் நமஸ்காரம்.

19 ப்ரம்ஹேசா நாச்யுதேசாய ஸூர்யா யாதித்யவர்ச்சஸே
பாஸ்வதே ஸர்வபக்ஷாய ரௌத்ராய வபுஷே நம:.

(பதவுரை) ப்ரம்ஹேசாநாச்யுதேசாய—மும்மூர்த்தி முதலாய (உன் பொருட்டு) நம:—நமஸ்காரம். ஸூர்யாய—ஸூர்யரூபமாகிய, ஆதித்ய

Koviloor Digital Library

வர்சஸே—ஒளியையுடைய (உன்பொருட்டு) நம:—நமஸ்காரம். ஸர்வ பக்ஷாய—அனைவற்றையும் பூஜிக்கும் (உன் பொருட்டு) நம:—நமஸ் காரம், ரௌத்ராய—பயமுற்ற, வபுஷே—சரீரமுடைய (உன் பொருட்டு) நம:—நமஸ்காரம்.

20. தமோக்னாய ஹிமக்னாய ஶத்ருக்னாயா மிதாத்மனே
க்ருதக்னச்னாய தேவாய ஜ்யோதிஷாம்பதயே நம:.

(பதவுரை) தமோக்னாய—இருளையகற்றுபவனை (உன்பொருட்டு) நமஸ்காரம், ஹிமக்னாய—பனியை யொழிப்பவனை (உன்பாருட்டு நமஸ்காரம்,) ஶத்ருக்னாய—பகைவரை அழிப்பவனை(உன்பொருட்டு நமஸ்காரம்,) க்ருதக்னக்னாய—செய்நன்றியறியாதவனைகொல்பவனை (உன்பொருட்டு நமஸ்காரம்,) தேவாய—கதிரொளியால் விளங்குமுன் பொருட்டு (நமஸ்காரம்,) ஜ்யோதிஷாம்பதயே—ஒளியுடையவருக்கு நாதனாகிய உன்பொருட்டு, நம:—நமஸ்காரம்.

Koviloor Digital Library

21. தப்தசாமீகராபாய வஹ்னயே விஶ்வ கர்மணே
நமஸ்தமோபி நிக்னாய ருசயே லோகஸாக்ஷிணே.

(பதவுரை) தப்தசாமீகராபாய—உருக்கின தங்கத்திற்கு நிகரான காந்தியுடைய (உன்பொருட்டு) நமஸ்காரம், வஹ்னயே—அக்னிஸ்வ ரூபனாகிய (உன்பொருட்டு) நமஸ்காரம், விஶ்வகர்மணே—உலகத் தைச்செய்பவனாகிய (உன்பொருட்டு நமஸ்காரம்.) தமோபிநிக்னாய— பேரிருளை யழிப்பவனாகிய (உன்பொருட்டு) நமஸ்காரம், ருசயே— ஒளியால் திகழ்பவனாகிய (உன்பொருட்டு) நமஸ்காரம், லோகஸாக்ஷி ணே—உலகத்துக்கு ஸாக்ஷியாகிய (உன்பொருட்டு) நமஸ்காரம்.

தா-ம். உபாஸியாதவர்கட்கு பயங்கரனாகிய உன்பொ ருட்டு நமஸ்காரம். பிராணிகளைப் பலவிதமேவுகிற உமக்கு நமஸ்காரம். விரைவாகச் செல்பவரான உமக்கு நமஸ்காரம். நமஸ்காரம். தாமரையை மலரச் செய்பவராகிய உமக்கு

Koviloor Digital Library

நமஸ்காரம். அழிந்த உலத்தை உண்டுபண் ணவிருக்கும் உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்களான பிரும்ஹ ருத்திரர் விஷ்ணுக் களுக்குத் தலைவராகிய உமக்கு நமஸ்காரம். சூரிய ரூபமாகிய ஒளியுடைய உமக்கு நமஸ்காரம். எல்லாருக்கும் ஸம்ஹாரகரும் பிரளய காலத்தில் பயங்கரமான சரீரமுடைய உமக்கு நமஸ்காரம். இருளையகற்றுபவரான உமக்கு நமஸ்காரம். பனியை நீக்குபவரும், பகைவரைக் கொல்பவரும், கதிரொளியால் விளங்குபவரும், ஸகல ஜ்யோதிகளுக்கும் நாதனும் ஆகிய உமக்கு நமஸ்காரம். உருக்கின தங்கத்துக்கு நிகரான காந்தியுடையவரும், அக்னிரூபியும், ஸகல உலகத்துக்கும் கர்த்தாவும், இருளை போக்குபவரும், ஒளியால் திகழ்பவரும்,

Koviloor Digital Library

ஜனங்களின் (ஸுக்ருத்துஷ்க்ருத கர்மங்களுக்கு) ஸாக்ஷியு மாகிய உமக்கு நமஸ்காரம்.

(அவதாரிகை) இப்படி பனிரெண்டு ஸ்லோகங்களால் ஆதித்ய ஹ்ருதயஸ்தோத்திரத்தை யுபதேசித்து அதில் பிரதிபாதிக்கப்படுகிற தேவதையை இனி மூன்று ஸ்லோகங்களால் ஸ்துதிக்கிறார்.

22. நாஶய த்யேஷவை பூதம் ததேவ ஸ்ருஜதி ப்ரபு:
பாய த்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ கபஸ்திபி:.

(பதவுரை) ப்ரபு:—அனைவற்றையும் ஏவுபவனான, ஏஷவை—இம்மஹாபுருஷனே, பூதம்—உலகத்தை, நாஶயதி—அழிப்பவன், ததைவ—அவ்வுலகத்தையே, ஸ்ருஜதி—அளிப்பவன், ஏஷ:—இவனே, தபதி—தபிக்கிறான், கபஸ்திபி:—கிரணங்களால், பாயதி—உலர்த்துகிறான், வர்ஷதி—வர்ஷிக்கிறான்.

Koviloor Digital Library

23. ஏஷஸுப்தேஷு ஜாகர்தி பூதேஷு பரிநிஷ்டித:
ஏஷசைவாக்னி ஹோத்ரஞ்ச பலம் சைவாக்னி ஹோத்
[ரிணும்.

(பதவுரை) ஏஷ:—இவன், பூதேஷு—பிராணிகள், ஸுப்தேஷு—உறங்குகையில், பரிநிஷ்டித:—எங்கும் பரந்தவனுக, ஜாகர்தி—விழித்திருப்பவன், ஏஷஏவ—இவனே, அக்கினிஹோத்ரஞ்ச—அக்னிகாரியத்தையும், அக்னிஹோத்ரிணும்—அக்னிகாரியம்செய்பவருக்கு, பலம்சைவ—பலமும் (ஆகிருன்.)

24. வேதாஸ்ச க்ரதவஸ்சைவ க்ரதூனும் பலமேவச
யாநி க்ருத்யானி லோகேஷு ஸர்வ ஏஷரவி: ப்ரபு:.

(பதவுரை) வேதாஸ்ச—(இவன்) வேதமும், க்ரதவஸ்ய—சைவாகமும், க்ரதூனும்—யாகத்தினுடைய, பலமேவச—பலமும் (ஆகிருன்.) லோகேஷு—உலகங்களில், க்ருத்யானி—காரியங்கள்,

Koviloor Digital Library

யாணி—எவை (இருக்கின்றனவோ) அவைகளுக்கு, ஸர்வ:—ஸமஸ்தாத்மாவான, ரவி:—சூரியாந்தர்வர்த்தியான புருஷன், ப்ரபு:—நியாமகன்.

தா-ம். அனைவற்றையும் ஏவுபவனுன் இம்மஹா புருஷனே உலகத்தை யழிக்கிறார். மறுபடியும் ஸ்ருஷ்டிக்கிறார். இவரே கிரணங்களால் உலர்த்துகிறார். இவரே தபிக்கச் செய்கிறார். மழை பெய்கிறார். சகல பிராணிகள் உறங்குகையில் இவரே விழித்திருக்கிறார். இவரே அக்நிஹோத்திரம் முதலான யாகங்களைச் செய்பவர்களுக்கு பலப்ரதானம் பண்ணுகிறார். வேதங்களும், யாகங்களும், அவைகளின்பலன்களும், ஸர்வாத்மாவும், சூர்ய மண்டலத்தி லிருப்பவருமான இவரே உலகங்களில் இன்னும் எந்த கர்மங்கள் உண்டோ அவைகளுக்கு நியாமகன்.

Koviloor Digital Library

25. ஏன மாபத்ஸு க்ருச்ரேஷு காந்தாரேஷு பயேஷு ச
கீர்த்தயன் புருஷ: கஸ்சித் நாவஸீததி ராகவ.

(பதவுரை) ராகவ—ஓ! ராம, கஸ்சித்—புருஷ:—ஓரானொருபுருஷன், ஆபத்ஸு—ஆபத்திலும், க்ருச்ச்ரேஷு—துயரத்திலும், பயேஷு—பயங்களிலும், ஏனம்—இவ்வாதித்யஹ்ருதயத்தை, கீர்த்தயன் ஸ்துதிபண்ணினானாகில், நாவஸீததி—துயரமுறான்.

தா-ம். ஓ! ராகவ! எவனொருவன் அகாலம் ம்ருத்யு முதலான ஆபத்துக்களிலும், சோராதிகளான பயகாரணங்கள் உண்டாகும்போதும் இந்த ஸ்தோத்திரத்தை ஸ்துதித்தானாகில் சிறிதும் துயரமடையான்.

26. பூஜயஸ்வேந மேகாக்ரோ தேவதேவம் ஜகத்பதிம்
ஏதத்திரிகுணிதம் ஜப்த்வா யுத்தேஷு விஜயிஷ்யஸி.

Koviloor Digital Library

(பதவுரை) ஏகாக்ர:—(நீ) ஒரேமனமுடையவனாக, தேவ தேவம்—தேவதேவனை, ஜகத்பதிம்—உலகபதியான, ஏநம்— இவனை, பூஜயிஷ்வ—பூஜிப்பாயாக, ஏதத்—இந்த (ஆதித்யஹ்ருத யத்தை) திரிகுணிதம்—மும்முறை, ஜப்த்வா—ஜபித்து, யுத்தேஷு— யுத்தத்தில், விஜயிஷ்யஸி—வெல்லுவாய்.

27. அஸ்மின் க்ஷணே மஹாபாஹோ ராவணம்த்வம் வதிஷ்யஸி
ஏவ முக்த்வா ததா கஸ்த்யோ ஜகாமச யதாகதம்.

(பதவுரை) மஹாபாஹோ—ஓ! பெருபுயமுடையோனே, த்வம்— நீ, அஸ்மின்-க்ஷணே—இந்த-நிமிஷத்தில், ராவணம்—இராவணனை, வதிஷ்யஸி—கொல்வாயாக, ததா-அகஸ்த்ய:—அப்போது-அகஸ்த்யர், ஏவம்-உக்த்வா—இப்படி சொல்லி, யாதாகதம்—வந்தபடி, ஜகாம— சென்றார்.

தா-ம். ஒரே மனமுடையவராக, தேவதேவரும் உலகப தியான இப்பரம புருஷனை பூஜியும். இந்தஸ்தோத்திரத்தை

Koviloor Digital Library

மும்முறை ஜபித்து யுக்தத்தில் விசேஷஜயத்தை யடைவீர் ஓ! பெரு புயமுடையோனே! நீ இந்த நிமிஷத்திலேயே இராவணனைக் கொல்வாயாக. இப்படி அகஸ்த்யர் சொல்லி வந்தபடியே போய்விட்டார்.

28. ஏதச்ச்ருத்வா மஹாதேஜா நஷ்டஸோகோ பவத் ததா
தாரயமாஸ ஸுப்ரீதோ ராகவ: ப்ரயதாத்மவான்.

(பதவுரை) ததா—அப்பொழுது, மஹாதேஜா:—பெரு தேஜஸ்ஸுடைய, ராகவ:—ஸ்ரீராகவன், ஏதத்-ஸ்ருத்வா—இதை கேட்டு, நஷ்ட ஸோகா:—ஒழிந்த துயரமுடையவராக, அபவத்—ஆயினர், ஸுப்ரீத:—வெகு களிப்புற்றவராக, ப்ரயதாத்மவான்—தூய்மை யுற்றமனமுடையவராக, தாரயாமாஸ—தரித்தனர்.

29. ஆதித்யம் ப்ரேக்ஷ்ய ஜப்த்வாது பரம் ஹர்ஷ மவாப்தவான்
த்ரிராசம்ய ஸுசிர்பூத்வா தனுராதாய வீர்யவான்.

Koviloor Digital Library

(பதவுரை, வீர்யவான்—வெகுபராக்கிரமமுடைய (ஸ்ரீராகவன்), ஆசம்ய—ஆசமனஞ்செய்து, ஶுசி:—பரிசுத்தராக, பூத்வா—ஆகி, ஆதித்யம்—சூரியனை; ப்ரேக்ஷ்ய—பார்த்து, த்ரி: ஜப்த்வா து—மூன்று தரம்ஜபித்து, தனு: ஆதாய—வில்லை எடுத்துக்கொண்டு, பரம்-ஹர்ஷம்—வெகுகளிப்பை, அவாப்தவான்—அடைந்தவராயினர்.

தா-ம். மஹா தேஜஸ்வியாகிய ஸ்ரீ ராகவன் இதைக் கேட்டு சோகம் விடுபெட்டவரானர். மிகவும் சந்தோஷித்து தூய்மையுற்ற மனமுடையவராக அதை தரித்தார். வெகு பராக்ரமமுடையஸ்ரீராகவன் மூன்றுதரம ஆசமனம் செய்து பரிசுத்தமாய் சூரியனைப் பார்த்து (அதை ஜபித்து)பெருதத வீர்யமுடையவராகி வில்லைத் தாங்கி நின்று பரமாநந்ததைதை யடைந்தார்.

30. ராவணம் ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்மா யுத்தாய ஸமுபாகமத்
ஸர்வயத்னேன மஹதா வதே தஸ்யத்ருதோபவத்.

Koviloor Digital Library

(பதவுரை) ராவணம்—(அவ்விராகவன்) இராவணனை, ப்ரேக்ஷ்ய—பார்த்து, ஹ்ருஷ்டாத்மா—களிப்புற்ற மனமுடையவராக, யுத்தாய—போரின் பொருட்டு, ஸமுபாகமத்—கிட்டினர். மஹதா—மிகுந்த, யத்னேன—யத்னத்தால், தஸ்ய—அவ்விராவணனுடைய வதே—கொலையில், த்ருத:—நிச்சயித்தவராக, அபவத்—ஆனார்

31. அத ரவிரவதந்நிரீக்ஷ்ய ராமம்
முதிதமநா: பரமம் ப்ரஹ்ருஷ்யமாணஃ
நிசிசரபதி ஸங்க்ஷயம் விதித்வா
ஸுரகணமத்யகதோ வசஸ்த்வரேதி.

(பதவுரை) அத-ரவி:—பிறகு சூரியன், முதிதமனா:—களிப்புற்ற மனமுடையவனாக, பரமம்—மிகவும், ப்ரஹ்ருஷ்யமான:—சந்தோஷமுடையவனாக, ஸுரகணமத்யகத:—தேவகணமத்தியை யுடைந்து, ராமம்—ஸ்ரீராகவனை, நிரீக்ஷ்ய—பார்த்து, நிசிசரபதி ஸங்க்ஷயம்—

Koviloor Digital Library

அரக்கர் கோமானின் அழிவை, விதித்வா—தெரிவித்து, த்வர—துரிதப்படும், இதி—என்று, வச:—அவதத்—வார்த்தையைச் சொல்லினர்.

ஸாரம். ஸ்ரீராமர் இராவணனைப் பார்த்து களிப்புற்ற மனமுடையவராய் போரின் பொருட்டுக்கிட்டினர். மிகுந்த யத்தனத்தினால் அவ்விராவணனுடைய வதத்தில் வாங்காத நிச்சயமுடையவராக ஆனார். பிறகு சூரியன் களிப்புற்ற மனமுடையவனாக தேவகண மத்தியையடைந்து ஸ்ரீராமனை பார்த்து அரக்கர் கோமானின் அழிவை அனுக்ரஹித்து, (ராவண வதத்தைப்பற்றி) த்வரைப்படும் என்கிற வார்த்தையைச் சொன்னார்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணாந்தர்கதமான

ஆதித்ய ஹ்ருதயம்.

முற்றிற்று.

Koviloor Digital Library

Koviloor Digital Library

தமிழில்

1.	யஜுர்வேத ஸந்தியா வந்தனம், முதலிய	0	2	0
2.	ருக்வேதம் ஷை.	0	2	6
3.	சாமவா தண்டகம்	0	1	0
4.	விஷ்ணுசகஸ்ர நாமாவளி	0	3	0
5.	ஸாமவேத ஸந்தியா வந்தனம், முதலிய	0	2	6
6.	ஸ்தோத்ரமாலா அல்லது ஸ்துதிமஞ்சரி	0	3	0
7.	கல்பத்ரயம் (விநாயகர், சரஸ்வதி வரலக்ஷ்மி பூஜைகள் பிராணப் பிரதிஷ்டையுடன்)	0	4	0
8.	விஷ்ணு சகஸ்ர நாமம்	0	6	0
9.	சுப்ரமண்ய ஸ்தோத்ரம்	0	2	0
10.	லக்ஷ்மி சகஸ்ரநாமம்	0	6	0
11.	லலிதா சகஸ்ரநாமம்	0	6	0
12.	சுப்ரமண்ய பூஜாவிதி	0	3	0
13.	புருஷஸூக்தம், ஸாந்திபஞ்சகம், ஸ்ரீஸூக்தம், பூஸூக்தம், அர்க்கஸூக்தம், ருத்ரகவசம்.	0	2	0